2012 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**80—**

## கல்லூரி விடுதி

***4242—திரு. பி.வி. கதிரவன்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

*2011–2012 ஆம் ஆண்டில் கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகிய மாணவ மாணவிகளுக்காக 28 விடுதிகளைப் புதிதாகத் திறப்பதற்கு ஆணையிடப்பட்டது. உசிலம்பட்டியில் ஆய்வு செய்ததில் அங்குள்ள கல்லூரியில் பயிலும் மாணவிகள், கல்லூரியைச் சுற்றியுள்ள உள்ளூர்ப் பகுதியிலிருந்து வந்து கல்வி பயின்று வருகின்றனர். தொலைதூரத்திலிருந்து எவரும் வரவில்லை. எனவே, மாணவிகளுக்கெனக் கல்லூரி விடுதி தொடங்கவேண்டிய அவசியம் அங்கே எழவில்லை. எனினும், ஆண்களுக்கான கல்லூரி விடுதி தொடங்குவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

**[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 3. தகவல் கோரல்

### (அ) கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் பணி நியமனத்தில் முறைகேடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன, திரு. ஆறுமுகம்? ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் 35 உதவிப் பேராசிரியர்கள் நியமனம் சம்பந்தமாக ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

**திரு. கே. கோபிநாத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநில எல்லையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஒரு* check dam *கட்டியிருக்கிறார்கள். அதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் வந்தவுடன் அதுகுறித்து எடுத்துக்கொள்ளலாம். தயவு செய்து உட்காருங்கள்.*